11th February 1959]

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ஒவ்வொரு இடத்திலும் வைத்துக்கொள்வதினால் பலவித அசௌகரியங்கள் இருக்கின்றன. அவைகளுக்கெல்லாம் பயிற்சி அளிக்க வேண்டியிருக்கின்றன. இப்பொழுது அவைகள் தேவைப்படுகிற இடங்களுக்கு சீக்கிரமாக ஏரோப்பிளேனில் கொண்டு செல்லப்படுகின்றன.

Sandalwood Products

* 228 *Q.*—SRI P. G. MANICKAM : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) சென்னை ராஜ்ஜியத்திலே சந்தன மரத்திலிருந்து எண்ணை உற்பத்தி செய்வதோடுகூட இந்த எண்ணையிலிருந்து இதர பொருள்களையும் உற்பத்தி செய்வதற்காக தொழிற்சாலை ஒன்றை அரசாங்கத்தின் மூலமாக நிறுவுவதுபற்றி பரிசீலனை செய்யப்பட்டு வருகிறதா ?

(ஆ) அவ்வாறு பரிசீலனை நடத்தப்படுபவரின் விவரங்கள் யாவை ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—(*a*) & (*b*) The proposal for the extraction of sandalwood oil on a State monopoly basis was examined by the Government and was deferred for the present. No other proposal for manufacture of products of sandal wood oil was examined by the Government so far.

SRI P. G. MANICKAM : ஒரு சந்தன எண்ணைத் தொழிற்சாலை மூலம் பல லட்சக்கணக்கான பேர்களுக்கு வேலை கொடுக்கலாம். ஆகவே இதை மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்து ஏற்படுத்துவதற்கு பரிசீலனை செய்வார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : சந்தன எண்ணையை எல்லா மார்க்கட்டிலும் விற்கிறார்கள். இப்பொழுது கிடைக்கும் வருமானத்தைவிட ஆலைகள் வைத்தால் அதிகம் கிடைக்குமா என்பது பரிசீலனை செய்யவேண்டிய விஷயம்.

National Extension Scheme

*229 *Q.*—SRI M. SELVARAJ (on behalf of Sri A. Govindasamy) கனம் முதல் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) விழுப்புரம் தேசிய விஸ்தரிப்பு திட்டத்தில் வளவனூர் பிர்க்காவில் தொடர்ச்சியாகயுள்ள மேலும் சில கிராமங்களைச் சேர்க்க வேண்டுமென்று கோரிக்கை சர்க்காருக்கு வந்ததா?

(ஆ) அதன் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) Yes, Sir.

(*b*) A representation was received by the Collector of South Arcot. It has been considered that it is not advisable to add any more villages to the Villupuram Block as it will impair the efficient working of the Block.

SRI M. SELVARAJ : அரிசிபாளையம் தாண்டி, சேந்தமங்கலம் கிராமங்களை ஒன்றாக இணைத்து அந்த பிளாக்கில் சேர்த்துக்கொள்வார்களா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ஒவ்வொரு பிளாக்கிலும் எவ்வளவு மக்கள் எண்ணிக்கை இருக்க வேண்டும் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அதைவிட அதிகமாக இருக்குமானால் பிளாக்குகளை சரிவர நடத்துவது கஷ்டமாக இருக்கும்.